**உயர் கல்வித் (இ1) துறை**
**கடிதம் (நிலை) எண். 71, நாள். 21.5.2012**

அனுப்புநர்
முனைவர் .தி.ஸ்ரீ.ஸ்ரீதர், இ.ஆ.ப.,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்
கல்லூரிக் கல்வி இயக்குநர் (பொ),
சென்னை–6.

அம்மையீர்,

பொருள்: கல்லூரி கல்வி– சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்க அனுமதி வழங்க கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு அதிகாரம் வழங்கி ஆணையிடப்பட்டது – அதிகாரம் மாற்றம் செய்த ஆணையினை ரத்து செய்தல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

பார்வை:1. அரசு கடித (நிலை) எண்.249, உயர் கல்வி (இ1) துறை, நாள்.8.11.2011
2. அரசு கடிதம் எண்.20034/இ1/2011–1, நாள்.21.11.2011.
3. சென்னை, கல்லூரிக்கல்வி இயக்குநர் அவர்களின் கடித எண். 57055/ ஆர் 1/2012, நாள்.11.5.2012.

*****

பார்வை ஒன்று மற்றும் இரண்டில் காணும் கடிதங்களில் பல்கலைக்கழக மான்யக்குழு மற்றும் தேசிய ஆசிரியர் பயிற்சி குழுமம் ஒப்புதல் வழங்கும் பாடப்பிரிவுகளுடன் சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை துவங்க அரசுக்கு உள்ள அனுமதி வழங்கும் அதிகாரத்தை கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு மாற்றம் செய்து அரசால் ஆணையிடப்பட்டது.

2. இந்நிலையில், தற்போது பார்வை மூன்றில் காணும் கடிதத்தில், தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (ஒழுங்காற்று) சட்டம், 1976 மற்றும் விதிகளின்படி தனியார் சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் துவங்குவதற்கு அனுமதி வழங்க அரசுக்கு மட்டுமே அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்ற நிலையில், கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தினை அரசு மறுபரிசீலனை செய்து, அதனை விலக்கி (withdraw) ஆணை வெளியிடுமாறு தங்களிடமிருந்து கருத்துரு பெறப்பட்டது.

3. மேற்கண்ட கருத்துரு அரசால் ஆய்வு செய்யப்பட்டு, பார்வை ஒன்று மற்றும் இரண்டில் காணும் கடிதங்களில், சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்குவதற்கான அனுமதி வழங்கும் அதிகாரத்தை கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு மாற்றம் செய்து வெளியிடப்பட்ட ஆணைகள் இரத்து செய்யப்படுகின்றன. இனிமேல், மேற்குறிப்பிட்ட கல்லூரிகளை தொடங்குவதற்கு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (ஒழுங்காற்று) சட்டம், 1976–இன்படி அரசளவில் ஒப்புதல் வழங்கப்படும் என்பதை தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

அரசு கூடுதல் தலைமைச் செயலாளருக்காக

நகல்
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அரசுக் கடிதம் (நிலை) எண்.249, உயர் கல்வித் (இ1) துறை, நாள்.8.11.11.
உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை –9.
இ.கோ / உதிரி